## வல்லினம் மிகும் இடங்கள்

நிலைமொழியின் இறுதியில் மெய்யெழுத்தோ, உயிரெழுத்தோ நின்று, வருமொழி முதலில் க், ச், த், ப் என்னும் நான்கு வல்லின உயிர்மெய்களுள் ஒன்று வந்தால், இடையில் வருமொழி முதல் வல்லின மெய் மிகுந்து புணரும் என்பது பொது விதி. இவ்வாறு வல்லெழுத்து மிகுந்து புணர்தலையே ‘வலிமிகுதல்’ என்கிறோம். இதற்கு வலிமிகுதல், வல்லொற்று மிகுதல், ஒற்று மிகுதல், வல்லினம் மிகுதல், வல்லின மெய் மிகுதல், கசதப மிகுதல், சந்தி மிகுதல் என்று பல பெயர்.

1. அ, இ என்ற சுட்டெழுத்தும் எ வினா எழுத்தும் நிலைமொழியாக வந்து, வருமொழியில் முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வந்தால் இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்

   **சான்று**

   அ + குடம் = அ**க்**குடம், அ + காலம் = அ**க்**காலம், இ + படை = இ**ப்**படை, எ + படை = எ**ப்**படை

2. அந்த, இந்த என்ற சுட்டு எந்த என்ற வினாச்சொற்கள் நிலைமொழியாக வந்து, வருமொழியில் முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வந்தால் இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

   **சான்று**

   அந்த + பள்ளி = அ**ப்**பள்ளி, அந்த + காலம் = அந்த**க்**காலம், இந்த + பையன் = இந்த**ப்**பையன், எந்த + பாடம் = எந்த**ப்**பாடம்

3. அங்கு, இங்கு, எங்கு என்ற சொற்கள் நிலைமொழியாக வந்து, வருமொழியில் முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வந்தால் இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

அங்கு + கேட்டேன் = அங்கு**க்**கேட்டேன், அங்கு + சென்றான் = அங்கு**ச்**சென்றான், இங்கு + கண்டேன் = இங்கு**க்**கண்டேன், எங்கு + செல்வது = எங்கு**ச்**செல்வது

4. ஆங்கு, ஈங்கு, யாங்கு என்னும் சொற்கள் நிலைமொழியாக வந்து, வருமொழியில் முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வந்தால் இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

ஆங்கு + சென்றான் = ஆங்கு**ச்**சென்றான், ஈங்கு + கொடுத்தான் = ஈங்கு**க்**கொடுத்தான், யாங்கு + சென்றாய் = யாங்கு**ச்**சென்றாய்

5. ஆண்டு, ஈண்டு, யாண்டு என்னும் சொற்கள் நிலைமொழியாக வந்து, வருமொழியில் முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வந்தால் இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

ஆண்டு + சென்றான் = ஆண்டு**ச்**சென்றான், ஈண்டு + தந்தேன் = ஈண்டு**த்**தந்தேன், யாண்டு + சென்றான் = யாண்டு**ச்**சென்றான்

6. அத்துணை, இத்துணை, எத்துணை என்னும் சொற்கள் நிலைமொழியாக வந்து, வருமொழியில் முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வந்தால் இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

அத்துணை + பெரிய சிலையா = அத்துணை**ப்** பெரியசிலையா?

இத்துணை + பெரிய வீடா = இத்துணை**ப்** பெரியவீடா?

எத்துணை + பெரியமனம் = எத்துணை**ப்** பெரியமனம்?

7. அவ்வகை, இவ்வகை, எவ்வகை என்னும் சொற்கள் நிலைமொழியாக வந்து, வருமொழியில் முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வந்தால இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

அவ்வகை + பூக்கள் = அவ்வகை**ப்**பூக்கள்?

இவ்வகை + கொடிகள் = இவ்வகை**க்**கொடிகள்

எவ்வகை + துணி = எவ்வகை**த்**துணி

8. அப்படி, இப்படி, எப்படி என்ற சொற்கள் நிலைமொழியாக வந்து, வருமொழியில் முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வந்தால் இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

அப்படி + செய்தான் = அப்படி**ச்**செய்தான்

இப்படி + சொல் = இப்படி**ச்**சொல்

எப்படி + கூறினாய் = எப்படி**க்**கூறினாய்?

10. வன்தொடர்க் குற்றுகரச்சொற்கள் நிலைமொழியாக வந்து, வருமொழியில் முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வந்தால் இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

வாக்கு + தந்தாள் = வாக்கு**த்**தந்தாள், அச்சு + பலகை = அச்சு**ப்**பலகை, சுற்று + சூழல் = சுற்று**ச்**சூழல், முத்து + குவியல் = முத்து**க்**குவியல்

11. மென்தொடர்க் குற்றுகரச்சொற்கள் நிலைமொழியாக வந்து, வருமொழியில் முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வந்தால் இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

சாந்து + பொட்டு = சாந்து**ப்**பொட்டு, அன்பு + கரங்கள் = அன்பு**க்**கரங்கள், சிலம்பு + செல்வர் = சிலம்பு**ச்**செல்வர்

12. திசைப்பெயர்கள் நிலைமொழியாக வந்து, வருமொழி முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வந்தால் இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

கிழக்கு + கடற்கரை = கிழக்கு**க்**கடற்கரை, மேற்கு + பாதை = மேற்கு**ப்**பாதை, வடக்கு + திசை = வடக்கு**த்**திசை

13. ஓரெழுத்து ஒருமொழி நிலைமொழியாக வந்து, வருமொழி முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வர இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

தீ + சுடர் = தீ**ச்**சுடர், கை + குட்டை = கை**க்**குட்டை, பூ + பந்தல் = பூ**ப்**பந்தல், தை + திங்கள் = தை**த்**திங்கள், மை + கூடு = மை**க்**கூடு

14. கடி, சால, தவ என்னும் உரிச்சொற்கள் நிலைமொழியாக வந்து, வருமொழி முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வர இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

கடி + கமலம் = கடி**க்**கமலம், சால + சிறந்தது = சால**ச்**சிறந்தது, தவ + பெரியவர் = தவ**ப்**பெரியவர்

15. ய், ர், ழ் என்னும் எழுத்துகள் நிலைமொழியின் இறுதியில் வந்து, வருமொழி முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வர இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

வாய் + கால் = வாய்**க்**கால், நாய் + கால் = நாய்**க்**கால், தேர் + தட்டு = தேர்**த்**தட்டு, பெயர் + பலகை = பெயர்**ப்**பலகை, கீழ் + தட்டு = கீழ்**த்**தட்டு

16. எல்லா, அனைத்து என்னும் சொற்கள் நிலைமொழியாக வந்து, வருமொழி முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வர இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

எல்லா + சிக்கல்களும் = எல்லா**ச்**சிக்கல்களும், எல்லா + பாடங்களும் = எல்லா**ப்**பாடங்களும், அனைத்து + கடைகளும் = அனைத்து**க்**கடைகளும்

17. மிக, தனி என்னும் சொற்கள் நிலைமொழியாக வந்து, வருமொழி முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வர இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

மிக + பேசினான் = மிக**ப்**பேசினான், தனி + குடித்தனம் = தனி**க்**குடித்தனம், தனி + சட்டம் = தனி**ச்**சட்டம்

18. அரை, பாதி என்னும் சொற்கள் நிலைமொழியாக வந்து, வருமொழி முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வர இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

அரை + புள்ளி = அரை<u>**ப்**</u>புள்ளி, அரை + சம்பளம் = அரை<u>**ச்**</u>சம்பளம், பாதி + கிணறு = பாதி<u>**க்**</u>கிணறு

19. முன்னர், பின்னர் என்னும் சொற்கள் நிலைமொழியாக வந்து, வருமொழி முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வர இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

முன்னர் + பார்த்தார் = முன்னர்<u>**ப்**</u>பார்த்தார், பின்னர் + தின்றான் = பின்னர்<u>**த்**</u>தின்றான், முன்னர் + பேசினார் = முன்னர்<u>**ப்**</u>பேசினார்

20. ஈறுகெட்டு எதிர்மறைப் பெயரெச்சத்தில் வல்லினம் மிகும்.

**சான்று**

செல்லா + செல்வன் = செல்லா<u>**ச்**</u>செல்வன், கேளா + செவி = கேளா<u>**ச்**</u>செவி, ஓடா + குதிரை = ஓடா<u>**க்**</u>குதிரை, பாடா + குயில் = பாடா<u>**க்**</u>குயில்

21. உருவகங்களில் வலி மிகும்.

**சான்று**

முகம் + தாமரை = முக<u>**த்**</u>தாமரை, வாய் + பவளம் = வாய்<u>**ப்**</u>பவளம், பசி + பிணி = பசி<u>**ப்**</u>பிணி, கண்ணீர் + பூக்கள் = கண்ணீர்<u>**ப்**</u>பூக்கள்

22. பண்புத்தொகையில் வலி மிகும்.

**சான்று**

வெள்ளை + தாள் = வெள்ளை<u>**த்**</u>தாள், வட்டம் + பலகை = வட்ட<u>**ப்**</u>பலகை, கருப்பு + பணம் = கருப்பு<u>**ப்**</u>பணம், மெய் + பொருள் = மெய்<u>**ப்**</u>பொருள்

23. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.

**சான்று**

பவளம் + செவ்வாய் = பவள**ச்**செவ்வாய், மலர் + கண் = மலர்**க்**கண், முத்து + பல் = முத்து**ப்**பல், இரும்பு + கரம் = இரும்பு**க்**கரம்

24. ஆக, போக என என்னும் சொற்கள் நிலைமொழியின் இறுதியில் வந்து, வருமொழி முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வந்தால் இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

நல்லவனாக + பார் = நல்லவனாக**ப்**பார், போக + சொன்னான் = போக**ச்**சொன்னான், உண்மையென + கூறினான் = உண்மையென**க்** கூறினான்

25. மற்று, மற்ற, மற்றை என்னும் சொற்கள் நிலைமொழியாக வந்து, வருமொழி முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வர இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

மற்று + சிலவற்றை = மற்று**ச்**சிலவற்றை, மற்று + பிற = மற்று**ப்**பிற, மற்றை + செயல்கள் = மற்றை**ச்**செயல்கள், மற்ற + கடை = மற்ற**க்**கடை,

26. முற்றியலுகரத்தின் பின் வலி மிகும்.

**சான்று**

திரு + குறள் = திரு**க்**குறள், நடு + தெரு = நடு**த்**தெரு, புது + பானை = புது**ப்**பானை

27. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

**சான்று**

தாமரை + பூ = தாமரை**ப்**பூ, சாரை + பாம்பு = சாரை**ப்**பாம்பு, அன்னம் + பறவை = அன்ன**ப்**பறவை, யானை + குட்டி = யானை**க்**குட்டி

28. அ, இ, உ என்னும் ஈறுகளை உடைய வினையெச்ச சொற்கள் நிலைமொழியின் இறுதியில் வர, வருமொழி முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின உயிர்மெய்களுள் ஏதேனும் ஒன்று வந்தால் இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

உற்று + பார்த்தான் = உற்று**ப்**பார்த்தான், பார்த்து + பேசினான் = பார்த்து**ப்**பேசினான், தேடி + சென்றான் = தேடி**ச்**சென்றான், உண்ண + சென்றான் = உண்ண**ச்**சென்றான்

29. ஆய், போய் என்னும் வினையெச்சங்களின் பின் வலி மிகும்.

**சான்று**

நன்றாய் + பாடினான் = நன்றாய்**ப்**பாடினான், போய் + பார்த்தான் = போய்**ப்**பார்ததான்

30. பற்றி, தவிர, குறித்து என்னும் சொற்களின் பின் வலி மிகும்.

**சான்று**

அதைப்பற்றி + கூறாதே = அதைப்பற்றி**க்**கூறாதே, அதுகுறித்து + சொன்னாய் = அதுகுறித்து**ச்**சொன்னாய், உன்னைத்தவிர + பிறர் = உன்னைத்தவிர**ப்**பிறர்

31. ஆகார ஈற்றுப் பெயர்ச்சொற்களின் பின் வலி மிகும்.

**சான்று**

பலா + பழம் = பலா**ப்**பழம், நிலா + சோறு = நிலா**ச்**சோறு, உலா + போகும் = உலா**ப்**போகும்

32. ஒன்று முதல் பத்து வரையிலான எண்ணுப்பெயர்களுள், எட்டு, பத்து ஆகிய இரண்டின் பின் மட்டுமே வல்லினம் மிகும்.

**சான்று**

எட்டு + தொகை = எட்டு**த்**தொகை, எட்டு + திசை = எட்டு**த்**திசை, பத்து + பாட்டு = பத்து**ப்**பாட்டு

33. இரண்டாம் வேற்றுமை உருபான ஐ என்னும் எழுத்து நிலைமொழியின் இறுதியில் விரிந்து வர, வருமொழி முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின மெய்களுள் ஏதேனும் ஒன்று வந்தால் இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

நூலை + பார் = நூலை**ப்**பார், உண்மையை + சொன்னான் = உண்மையை**ச்**சொன்னான்

34. நான்காம் வேற்றுமை உருபான கு என்னும் எழுத்து நிலைமொழியின் இறுதியில் விரிந்து வர, வருமொழி முதலில் க், ச், த், ப் என்னும் வல்லின மெய்களுள் ஏதேனும் ஒன்று வந்தால் இவ்விரண்டு மொழியும் சேரக்கூடிய இடத்தில் வலி மிகும்.

**சான்று**

தம்பிக்கு + கொடுத்தான் = தம்பிக்கு**க்**கொடுத்தான், யாருக்கு + தந்தாய் = யாருக்கு**த்**தந்தாய்

35. இரண்டாம் வேற்றுமை உருபும்(ஐ) பயனும் உடன்தொக்க தொகையில் இடத்தில் வலி மிகும்.

**சான்று**

தண்ணீர் + குடம் = தண்ணீர்**க்**குடம்(தண்ணீரை உடைய குடம்)

நகை + பெட்டி = நகை**ப்**பெட்டி(நகையை வைக்கும் பெட்டி)

36. மூன்றாம் வேற்றுமை உருபும்(ஆல்) பயனும் உடன்தொக்க தொகையில் இடத்தில் வலி மிகும்.

**சான்று**

தங்கம் + காப்பு = தங்கக்காப்பு(தங்கத்தால் ஆன காப்பு)

வெள்ளி + கிண்ணம் = வெள்ளி**த்**கிண்ணம்(வெள்ளியால் ஆன கிண்ணம்)

37. ஆறாம் வேற்றுமைத்(அது) தொகையில் முதல் சொல் அ.்.றிணையாக இருந்தால் வலி மிகும்.

**சான்று**

யானை + கால் = யானை**க்**கால், பூனை + கண் = பூனை**க்**கண், புலி + தோல் = புலி**த்**தோல்

38. ஏழாம் வேற்றுமைத்(கண்) தொகையில் வலி மிகும்.

**சான்று**

சுவர் + கடிகாரம் = சுவர்**க்**கடிகாரம், குடி+ பிறந்தார் = குடி**ப்**பிறந்தார்

39. ஏழாம் வேற்றுமை உருபம் பயனும் உடன்தொக்க தொகையில் வலி மிகும்.

**சான்று**

மலை + பாதை = மலை**ப்**பாதை, சோலை + குயில் = சோலை**க்**குயில்